**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.சா.சேதுராம வர்மா,**

ந.க.எண். 022204 /பி1/2022 நாள் : 21.02.2023

பொருள்: பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு ஏப்ரல் 2023 – பள்ளி மாணாக்கர்கள் – அறிவியல் பாட செய்முறைத் தேர்வு நடத்துதல், மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் (Download) செய்தல் மற்றும் சில அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

******

**ஆணை:**

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2023 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள மாணாக்கர்களுக்கு அறிவியல் பாட செய்முறைத் தேர்வுகளை 20.03.2023 முதல் 28.03.2023 வரை நடத்திட, (22.03.2023 மற்றும் 26.03.2023 நீங்கலாக) அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு கீழ்க்கண்டவாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள கால அட்டவணை மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி செய்முறைத் தேர்வுக்கான அனைத்துப் பணிகளையும் முடித்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

## SSLC APRIL 2023 PRACTICAL EXAMINATION SCHEDULE

**For Regular Candidates**

| | |
|---|---|
| Empty Mark Sheets for Practical Exam with Register Number downloading from (for regular candidates) | 10.03.2023 at 2.00 p.m. onwards |
| Practical Examination to be conducted | 20.03.2023 TO 28.03.2023 |
| Mark Sheet, Practical Exempted Candidate Letter & List to be submitted in AD's | On or before 29.03.2023 |
| Online entry of Marks by AD for regular candidate | 29.03.2023 TO 05.04.2023 |

அறிவியல் செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண் பட்டியல் தயாரிக்கும் மென்பொருள் www.dge1.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது.

..2..

1. www.dge1.tn.gov.in என்ற இணையதளத்தில் சென்று Click to access Online Portal என்ற Option–ஐ Click செய்யவும்.
2. SSLC APRIL 2023 எனத் தோன்றும் பகுதியை Click செய்யவும்.
3. தங்களது பள்ளியின் User ID மற்றும் Password–ஐ Type செய்து Sign In என்ற Option–ஐ Click செய்யவும்.
4. SSLC APRIL 2023 SCIENCE PRACTICAL BATCH ALLOTMENT என்ற பகுதியினைClick செய்யவும்.
5. Mark Sheet என்ற Option–ஐ Click செய்தால் Practical தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல் Download ஆகும். அதனை Printout எடுத்துக் கொள்ளவும்.
6. Download Attendance Sheet என்ற பகுதியை Click செய்தால் Attendance Sheet Download ஆகும். இதனை தேர்வின்போது மாணவர்களிடம் கையொப்பம் பெற பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. இதனை அடிப்படையாகக் கொண்டு செய்முறைத் தேர்விற்கு மாணவர்களை அனுமதித்திடல் வேண்டும்.

<u>பொதுவான அறிவுரைகள்</u>

ஒரு பெயர்பட்டியலில் காணப்படும் தேர்வர்கள், வெவ்வேறு செய்முறைத் தேர்வு மையங்களுக்குத் தொடர்பு உடையவர்களாக இருந்தால், பெயர்ப்பட்டியலை நகல் எடுத்து சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

செய்முறைத் தேர்வு முடிவுற்ற பின்னர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலிருந்தும் செய்முறை மதிப்பெண் பட்டியல்களை <u>29.03.2023–க்குள்</u> சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

அனைத்து பள்ளிகளிலிருந்து பள்ளி மாணவர்களது மதிப்பெண் பட்டியல் பெறப்பட்டவுடன் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் மூலமாக On Line–ல் பதிவேற்றம் செய்திடவேண்டும். இப்பணி <u>29.03.2023–ல் தொடங்கி 05.04.2023–க்குள்</u> முடிக்கப்பட வேண்டும்.

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்கள் அனைவரது செய்முறைத் தேர்வு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது.

இறுதியாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழை பூர்த்தி செய்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலரின் அலுவலக முத்திரையுடன் உதவி இயக்குநர்கள் கையொப்பமிட்டு, அச்சான்றிதழை 06.04.2023–க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை தவறாமல் பின்பற்றி உரிய முறையில் திட்டமிட்டு, இத்தேர்வினை தனிக்கவனம் செலுத்தி எந்தப் புகாருக்கும் இடமளிக்காமல் சிறப்பாக நடைபெறும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு முதன்மை /மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு : மேற்கூறியவாறு, செய்முறைத் தேர்வு நடத்துதல் சார்பான அறிவுரைகள்

பெறுநர்:

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. இணை இயக்குநர் (கல்வி), பாண்டிச்சேரி

நகல்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்

<u>சான்றிதழ்</u>

---------------------- கல்வி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வகைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் (எவரும் விடுபடாமல்) அறிவியல் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டன எனச் சான்றளிக்கிறேன்.

தேதியுடன் கூடிய கையொப்பம்

அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்

தேதி :

இடம் :